1981 பிப்ரவரி 27]

(ஆ) அத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவுகளின் தொகை எவ்வளவு ?

(இ) அத் திட்டம் எப்போது அமுலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) (ஆ), மற்றும் (இ): பத்து ஆண்டுகள் நீர் அளவைகள் எடுக்கதிட்டமிட்டு 1977 முதல் நீர் அளவைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும், இன்னும் ஏழு ஆண்டுகளுக்கு நீர் அளவைகள் எடுத்து, ஆய்வின் முடிவில், உபரி நீர் இருப்பதாகத் தெரிந்தால், இத்திட்டத்தை எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும் எனவும், தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. மே. அ. இராசகுமார் : தலைவர் அவர்களே, இத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 7 ஆண்டுகளுக்குப் பின்னர் அரசு இது பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. மே. அ. இராசகுமார் : தலைவர் அவர்களே, 7 ஆண்டுகள் என்பது மிகவும் நீண்ட காலமாக இருக்கிறது. எனவே அதை விரைவாக செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அதற்கு முன்பாக நீர் அளவைகள் எடுத்து முடிவுக்கு வர இயலாத காரணத்தினால், அதற்கு இன்னும் 7 ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

செம்மறிக்குளம் கிராமத்தில் படுகை நிலங்கள்.

* வினா எண். 296—**திரு. சி. கேசவ ஆதித்தன் :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

திருச்செந்தூர் தொகுதி செம்மறிகுளம் கிராமம் படுகையில் எப்பொழுதும் நீர் வற்றாமல் இருப்பதால் அதிலே பயிர் செய்யும் விவசாயிகளுக்கு அந்த நீரை வற்றவைத்து விவசாயம் செய்ய ஏற்பாடு செய்யும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : செம்மறிக் குளம் படுகை நிலங்களுக்கு வடிகால் வசதி அளிக்க மூன்று திட்டங்கள் தனித்தனியாக ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டன. ஆயினும் அவை பொருளாதார ரீதியில் பயன்

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

தரத்தக்க திட்டமாக இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டன. செம்மறிக்குளத்தின் உபரி நீரை கடையநேரி குளத்திற்கு வடிய வைக்க ஒரு திட்டம் ரூ. 10 லட்சத்திற்கு ஆய்வு செய்யப்பட்டு பொருளாதார ரீதியாக பயன்தரத்தக்க திட்டம் இல்லை என்று தெரிய வந்தது. இத்திட்டம் நிறைவேற்றப்படுமானால், சுற்றுப்புறக் கிராமங்களின் கிணற்றுப் பாசனம் மற்றும் குடி தண்ணீர் வசதி பாதிக்கப்படும் என்று கிராம மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். எனினும் இத்திட்டம் குறித்து மீண்டும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறுபாசனம் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. சி. கேசவ ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செம்மறிக்குளம் படுகையில் நீர் தேங்கி இருப்பதால் விவசாயிகள் பெரிதும் அல்லல் படுகிறார்கள். அந்தச் சுற்று வட்டாரத்திலே இருக்கின்ற கிராம மக்கள் பாதிக்கப் படுவார்கள். நீர் கிணற்றில் வற்றிவிடும் என்று அந்தக் கிராம மக்கள் கூறி வருகின்றார்கள். எனவே அந்தக் கிராமம் அருகே உள்ள குளங்களின் கரைகளைப் பலப்படுத்தி அந்த செம்மறிக்குளம் நீர்ப்படுகையில் தகுந்த முறையில் நீர் வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டம் குறித்துக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருடன் விவாதித்து, அந்தத் திட்டம் செயல் படுகின்ற இடத்தைப் பார்வையிட்டு மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதன்படி தலைமைப் பொறியாளர் செயல்பட்டு வருகிறார்.

திரு. மு. ஜான் வின்செண்ட்: தலைவர் அவர்களே, இந்த செம்மறிக்குளம் படுகையில் கிட்டத்தட்ட 9 மாத காலமாக தண்ணீர் நிறைந்து அதனால் விவசாயிகள் பயிர் செய்ய முடியவில்லை. ஆனால் அதே நேரத்தில் பக்கத்துப் பகுதியில் உள்ள லட்சக்கணக்கான பனைகள் அழியக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அங்கே உள்ள தண்ணீரை அப்புறப்படுத்தி அந்தப் பனைகளைப் பாதுகாக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து பேசி தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும்.

1981 பிப்ரவரி 27]

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்மறிக்குளத்தின் உபரி நீரை சடையநேரி குளத்திற்கு வடிய வைக்கும் திட்டம் பொருளாதார ரீதியில், பயன் தரத்தக்க திட்டம் இல்லை என்ற காரணத்தால் கைவிடப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே உள்ள பல்வேறு நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்கிற காரணத்தால், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இத் திட்டம் ஆய்வு செய்ததற்குப் பிறகு அரசு முடிவு செய்யும்.

வென்பாவூரில் பாசன ஏரி அமைக்கும் திட்டம்.

*வினா எண். 297—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியில் வெண்பாவூர் அருகே பாசன வசதிக்காக ஏரி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியில் வேண்பாவூர் அருகே ஏரி ஒன்று அமைப்பதற்குத் தேவையான முதன் நிலை ஆய்வுகள் (Prelimiuary investigat on) நடத்தப்பட்டன என்றும், இத்திட்டத்திற்கு சுமார் 80 ஏக்கர் வனத்துறை நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டியிருப்பதாலும், பொருளாதார ரீதியில் பயன்தரக்கூடிய திட்டமாக இல்லாத காரணத்தாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது என்றும் சிறு பாசனத் தலைமை பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, காட்டிலாக்காவிலிருந்து தேவைப்படுகிற நிலத்தைப் பெற்று அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற செய்திக்கு நன்றி. பொதுமக்களுக்கு—குறிப்பாக அந்தப் பகுதியில் வாழ்கிற பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பயன்படும் என்பதால், காட்டிலாகாவிலிருந்து சலுகை விலையில் அந்த நிலத்தைப் பெற்று, பொதுப்பணித்துறை அந்த ஏரித் திட்டம் நிறைவேற்ற அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.